**O.S.92/2020**

Date : 18.07.2025

வா.சா.1 : லெட்சுமணன்

<u>வா.சா. 1மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>

வழக்கு எதற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது எதற்கு என்று எனக்கு தெரியுமா என்றால் பாதையும் , கால்வாய் வடிகாலும் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். என் அப்பாவின் பூர்வீக சொத்து என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பள்ளிக்கூடத்து காம்பவுண்ட் கட்டும் நான் எழுத்துபூர்வமாக ஆட்சேபணை தெரிவித்தேனா என்றால் இல்லை. காம்பவுண்ட் கட்டியுள்ள பாதையை தவிர வேறு பாதை எனது வயலுக்கு உள்ளதா என்றால் இல்லை. காம்பவுண்ட் கட்டி 6 வருடங்கள் ஆகிறது. எனது வயலுக்கு 6 வருடங்களாக வாழை பயிர் செய்து வருகிறேன். தண்ணீர் எங்கிருந்து வருகிறது என்றால் குளத்தில் இருந்து வருகிறது. என்னுடைய இடத்திற்கு தண்ணீர் வருகிறது. ஆனால் அதிகமாக மழை பெய்யும் போது தேங்கி நிற்கிறது. வடிகால் வசதி இல்லை. வடிகால் வசதிக்காக மாவட்ட ஆட்சியரிடம் நான் மனு கொடுத்துள்ளேனா என்றால் மனு கொடுத்துள்ளேன். என் இடத்திற்கு அருகாமையில் வேறு யாரும் பாதிக்கப்பட்டுள்ளார்களா என்றால் வேறு யாரும் பாதிக்கப்படவில்லை. நீதிமன்றத்தில் இருந்து ஆணையர் வந்த விவரம் எனக்கு தெரியாது. TVS சுந்தரம் ஐயங்கார் அரசு மேல்நிலைப்பள்ளி திருக்குறுங்குடி எந்த ஆக்கிரமிப்பும் செய்யாமல் காம்பவுண்ட் கட்டியுள்ளார்கள் என்றால் கால்வாயை ஆக்கிரமிப்பு செய்து காம்பவுண்ட் கட்டியுள்ளார்கள். நான்தான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.